4th March 1969]

Talks over A.I.R. by Deputy Inspectors of Schools.

*106 *Q.*—Thiru G. KRISHNAMOORTHY (on behalf of Thiru M. Rajah Iyer); Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether Deputy Inspectors of Schools have to obtain prior permission before accepting broadcast talks over the All-India Radio; and

(*b*) if so, the competent authority empowered to accord such permission?

பள்ளித் துணை தணிக்கையாளர்கள் வானொலியில் உரை நிகழ்த்த அனுமதி வழங்கல்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளித் துணைத் தணிக்கையாளர்கள், அனைத்திந்திய வானொலியில் ஒலிபரப்பு உரை நிகழ்த்த ஒப்புக்கொள்வதற்கு முன்பு, முன் அனுமதி பெற வேண்டுமா ?

(இ) ஆம் எனில், அத்தகைய அனுமதியை வழங்குவதற்கு எந்த அதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம். ஆனால் ஒலிபரப்பப் படும் பேச்சு, இலக்கியம், கலை அல்லது அறிவியல் பற்றியதாக இருந்தால் அத்தகைய முன் அனுமதி எதும் தேவையில்லை.

(இ) மாவட்டக் கல்வி அதிகாரி.

திரு. சா. கணேசன் : இலக்கியம், கல்வி முதலியன பற்றிப் பேச அனுமதி தேவையில்லை என்று அமைச்சர் கூறினார்கள். இதே போலவே அவர்கள் பிற கழகங்கள், சங்கங்கள், இலக்கிய கூட்டங்கள் போன்றவைகளுக்குச் செல்ல அனுமதி இல்லாமல் இருக்கும்போது, இதற்கு மட்டும் தேவையாக இருந்தது. இப்போது அது நீக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது இல்லவே இல்லையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முன் அனுமதி எதுவும் தேவையில்லை என்பதிலிருந்து கடந்த காலத்திலிருந்து கடைப் பிடிக்கப்படுகிற கொள்கையாகத்தான் இருந்துவருகிறது.

Thiru D. SANTOSHAM : Is this restriction that is imposed on the Deputy Inspectors of Schools that they should not accept radio talks without prior permission a general restriction that is imposed on all Government servants or is it peculiar only to this cadre of Government servants?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது பொதுவான முறையில் தான் போடப்பட்டுள்ள உத்தரவாகும்.